## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (27.05.2015 முதல் 31.05.2015)

அறிக்கை எண் 40/2015 தேதி: 26.05.2015

### மாநிலத்தின் கடந்த வார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 32°செ முதல் 42°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 24°செ முதல் 31°செஆகவும் பதிவானது கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 23°செ முதல் 25°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 12°செ முதல் 16°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் ஒரு சில இடங்களில் இலேசான தூறல் மழை காணபட்டது.

### எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (27.05.2015 முதல் 31.05.2015)

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 35°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ முதல் 25°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 முதல் 85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 65 முதல் 73 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 15 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 27.05.15 | 0 | 35 | 25 | 3 | 75 | 65 | 15 | தென் மேற்கு |
| 28.05.15 | 4 | 34 | 24 | 4 | 78 | 70 | 15 | மேற்கு |
| 29.05.15 | 4 | 33 | 24 | 6 | 87 | 73 | 15 | தென் மேற்கு |
| 30.05.15 | 0 | 33 | 24 | 6 | 87 | 73 | 15 | வட கிழக்கு |
| 31.05.15 | 10 | 33 | 24 | 6 | 87 | 73 | 15 | தென் மேற்கு |

## வேளாண் அறிவுரை

- ✓ 28.05.2015 முதல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் காற்றின் வேகம் 15 கி.மீ-மணிக்கு எதிர்பார்க்கப்படுவதால் முன் பருவ கரும்பு மற்றும் ஐந்து மாதங்களான வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ 28.05.2015 முதல் மழை எதிர்பார்க்கப்படுவதால் கோடை கால இறவை பருத்தி அறுவடையை 27.05.2015 க்குள் முடித்துக் கொள்ளவும்.
- ✓ மஞ்சள் நடவு செய்யும் தருணம் 31.05.2015 க்குள் முடிவடைவதால் கிழங்கினை தகுந்த விதை நேர்த்தி செய்து நடவு செய்யவும்.
- ✓ 27.05.2015 அன்று வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் முன்பே அறுவடை செய்து குவியலிட்ட எள் பயிரினை வெய்யிலில் உலர்த்தி பிரித்து எடுக்கவும்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் கருது வரும் தருவாயிலுள்ள மக்காச்சோள பயிருக்கு போதுமான வடிகால் வசதி ஏற்படுத்தவும்.

## குறுஞ்செய்தி

- ✓ 27.05.2015 அன்று வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் முன்பே அறுவடை செய்து குவியலிட்ட எள் பயிரினை வெய்யிலில் உலர்த்தி பிரித்து எடுக்கவும். மேலும் கோடை கால இறவை பருத்தி அறுவடையை 27.05.2015 க்குள் முடித்துக் கொள்ளவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.